# 5

# தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்

*“தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் ” (எபே. 1:4-6).*

ஒவ்வொருவரும் நினைவுகூரப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். ஒருவேளை நம் எல்லாருக்குள்ளும் இருக்கின்ற இந்த விருப்பமே நமது புகழ்பெற்ற நான்கு வழக்குச் சொற்களைக் கொடுத்துள்ளது எனலாம். நமக்குப் பிரியமானவருக்கு நாம் அனுப்பும் பிறந்தநாள் வாழ்த்தின் குறுக்காக நாம், “உங்களை நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்” என்று எழுதுகின்றோம். தொலைபேசி உரையாடல் ஒன்றில் நமக்கு பிரியமான தோழமை உறவுள்ள ஒரு நண்பரிடத்தில், “நான் உங்களை நினைத்துக் கொண்டுள்ளேன்” என்று கூறுகின்றோம். விடுமுறையிலோ அல்லது வேறு ஏதாவது பயணத்திலோ நாம் வீட்டை விட்டுப் புறப்படுகையில் வீட்டில் உள்ளவர்களிடத்தில் நாம், ‘‘உங்களைப் பற்றி நாங்கள் நினைத்துக் கொண்டிருப்போம்” என்று கூறுகின்றோம். இவைகள், ஒரு நபர் விசேஷித்த வர் என்பதையும் அவர் மறக்கப்பட்டிருக்கவில்லை, மறக்கப்பட மாட்டார் என்பதையும் தெரிவிக்கின்ற மென்மையான சொல்விளக்கங்கள் ஆகும். இந்தச் சொல் விளக்கங்கள் உண்மைத் தன்மையுடன் பேசப்படும் பொழுது அல்லது எழுதப்படும் பொழுது நம் இருதயத்தைத் தொட்டு நம்மை உற்சாகப்படுத்துகின்றன.

நண்பர்களும் உறவினர்களும், அவர்கள் நம்மைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதாகக் கூறுவதைக் கேட்பதென்பது நமக்கு அர்த்தம் நிறைந்ததாயிருக்குமென்றால், தேவன் தம்முடைய பார்வையில் நாம் விசேஷமானவர்களாய் இருக்கின்றதாகக் கூறுவதைக் கேட்பதென்பது

எவ்வளவு அர்த்தம் நிறைந்ததாக இருக்க வேண்டும்! நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால் தேவன் இதையே உங்களுக்குக் கூறியிருக்கின்றார். எபே. 1:4-6ல் பவுல், கிறிஸ்தவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்று கூறினார். கிறிஸ்துவுக்குள் மீட்கப்பட்டவர்கள் யாவரும் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கின்றனர் என்று வேத வசனங்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்! இது உங்களை மாபெரும் வகையில் உற்சாகப்படுத்துவதில்லையா?

நாம் தேவனால் மிக முக்கியமானவர்களாக, பூமிக்குரிய எவ்வித கனமானவைகளை விடவும் பெரியவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இருக்கும்படிப் பரிசுத்த ஆவியானவர் அர்த்தப்படுத்தினார் என்பதைப் பவுல் இந்த வாக்கியத்தில் பயன்படுத்தும் வார்த்தையமைப்பில் இருந்து நாம் அறிகின்றோம். ஆசியா மைனர் பகுதியின் எபேசுவில் இருந்த சபைக்குப் பவுல் எழுதினார். அவரது நிருபத்திற்கான ஆய்வுக் கருத்தானது ''சபை, கிறிஸ்துவின் சரீரம்'' என்ற சொற்றொடரால் சுருக்கமாய் உரைக்கப்பட முடியும். இந்த நிருபத்தின் தொடக்கத்தில் பவுல், சபையானது தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அடங்கியது என்று எழுதினார். அவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாக, அவர் தம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களுக்கென்று தேர்ந்து கொண்ட மக்களாக இருக்கின்றனர். இவ்வகையான தேர்ந்து கொள்ளுதலை அவர் ''முன் குறித்தல்,'' முன்னதாகவே ஏற்பட்ட ஒரு தீர்மானம் அல்லது முன்னதாகவே தேர்ந்து கொள்ளுதல் என்று அழைக்கின்றார் (எபே. 1:5).

தேவன் நம்மை முன்னதாகவே தேர்ந்தெடுத்தல் என்ற இவ்விஷயமானது சில கேள்விகளை எழுப்புகின்றது அல்லவா? தேவன் ஒரு நபரை இரட்சிக்கப்படும்படியும் இன்னொருவரை இழந்துபோகும்படியும் தேர்ந்தெடுத்துக் கொள்வதாகப் பவுல் கூறினாரா? தேவன் ஒருவரைப் பரலோகத்திற்கும் இன்னொருவரை நரகத்திற்கும் தேர்ந்து கொள்கிறார் என்றால், யோவான் 3:16ல் இயேசு கூறியபடியாக அவர் இவ்வுலகத்தின் மக்கள் ஒவ்வொருவர் மீதும் ஒரு விசேஷித்த அன்பை எவ்விதம் கொண்டிருக்க முடியும்?

இந்த வசனப் பகுதியின் மீது நாம் ஒரு கவனம் நிறைந்த சிந்தனையைச் செலுத்தி, முன் குறித்தல் என்ற வசீகரமான பாடக் கருத்தின் மீதான நமது கேள்விகளுக்குப் பவுலைப் பதில் அளிக்க அனுமதிப்போம். தேவன் ஒவ்வொருவரிலும் எவ்விதம் அன்புகூருகிறார், உலகத் தோற்றத்திற்கு முன்னரே அவர் நம்மை எவ்விதமாக நினைத்தார், மற்றும் தேர்ந்து கொள்ளப்படுகிறவர்களாயிருக்கும்படி அவர் எவ்விதம் தேர்ந்து கொள்கிறார் என்பவைகளை எபே. 1:4-6ல் நாம் காண்போம்.

## அவருக்குள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்

முதலாவது, தேவன் "கிறிஸ்துவுக்குள் நம்மைத் தேர்ந்து கொண்டபடியே ..." (எபே. 1:4) என்று பவுல் கூறினார். தேவன் தம்முடைய இரட்சிப்பு மற்றும் தம்முடைய ஆவிக்குரிய மற்ற ஆசீர்வாதங்கள்

ஆகியவற்றை மனிதருக்கு அளிக்கத் தேர்ந்து கொண்ட இடம் அவருடைய குமாரனின் சரீரமாய் இருக்கின்றது. இந்த சரீரத்திற்குள் வந்தவர்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

எபே. 1:4-6ன் திரளான சந்தர்ப்பப் பொருளில், வேதாகமத்தின் மிக நீளமான வாக்கியப் பகுதியென்று கூறப்படும் 1:3-14ன் கடவுள் புகழ்ச்சியுரையில் பவுல், கிறிஸ்துவுக்குள் தேவன் வைத்துள்ள குறிப்பிட்ட ஆசீர்வாதங்களைத் தனித்தனியே குறிப்பிடுகின்றார். தேவனுடைய பிள்ளைகளாக சுவிகரிக்கப்படுதல் (வ. 6), மன்னிப்பு (வ. 7), மீட்பு (வ. 7), ஞானம் மற்றும் புத்தி (வ. 8), கிறிஸ்துவுக்குள் கூட்டப்படுதல் (வ. 9), சுதந்திர மாகுதல் (வ. 12) மற்றும் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படுதல் (வ. 13) ஆகியவற்றை அவர் குறிப்பிடுகின்றார்.

காலமற்ற கடந்த நித்தியத்துவத்தில் தேவன், கிறிஸ்துவுக்குள் வந்து கிறிஸ்துவின் கிருபையின் வரங்களைத் தங்களுக்குக் கிடைக்கச் செய்கின்ற யாவரும் தமது தேர்ந்தெடுத்த மக்களாக, தமது ஆசீர்வாதங்களால் மற்றும் தமது இரட்சிப்புக்கு என்று தேர்ந்து கொள்ளப்பட்டவர்களாய் இருக்க அவர் (தேவன்) முடிவு செய்தார். இரட்சிப்பின் இந்தத் திட்டமானது கடந்த நித்தியத்துவத்தில் தேவனால் முன் குறித்து, தீர்மானிக்கப்பட்டது. அவர் தம்முடைய தெரிந்து கொள்ளுதலில் சலனத்துடனோ அல்லது பார பட்சத்துடனோ இருந்ததில்லை. அவர் ஒரு நபரை இழந்து போவதற்கும், இன்னொரு நபரை இரட்சிக்கப்படுவதற்கும் முன் குறிப்பதில்லை, ஆனால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபைக்குள் பிரவேசிப்பதால் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்பவர்களை மட்டுமே இரட்சிப்பதாக அவர் தீர்மானித்துள்ளார்.

"முன் குறித்தல்" என்ற வார்த்தையானது "முன்னதாகவே நிலை நிறுத்தல்" என்று அர்த்தப்படுகையில், "முன்னறிவு" என்ற வார்த்தையானது "முன்னதாகவே அறிதல்" என்று அர்த்தப் படுகின்றது. யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்கள் மற்றும் யாரெல்லாம் இழந்து போகப்படுவார்கள் என்பதைத் தேவன் ஒருவேளை முன்னதாகவே அறிந்திருக்கலாம், ஆனால் அவர்களின் தனிப்பட்ட இரட்சிப்பையோ அல்லது அவர்களின் தனிப் பட்ட அழிவையோ அவர் முன் குறித்து வைப்பதில்லை. கிறிஸ்துவுக்குள் வருதல் பற்றி ஒவ்வொரு நபரும் தீர்மானிப்பதினாலேயே அவர் தாம் இரட்சிக்கப்படுவது அல்லது இழந்து போகப்படுவது ஆகியவற்றைத் தேர்ந்து கொள்ளுகின்றார்.

முன்னறிவு மற்றும் முன் குறித்தல் என்ற இந்த இரண்டு பாடக் கருத்துக்களும் நம்மால் முற்றிலுமாகப் புரிந்து கொள்வதற்கு மிகவும் ஆழமானவை என்பது தெளிவு. இவைகளைக் குறித்து வேதாகமம் கூறுபவற்றை நாம் விசுவாசத்தினால் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ள வேண்டியதாயுள்ளது. இருப்பினும், தேவன் முன் குறித்தல் இன்றி முன்னறிய முடியுமென்று வேதாகமம் மறைவாய் உணர்த்துகின்றது. தேவனுடைய முன்னறிவானது நமது ஞாபகத்தைப் போன்றது. நேற்று என்ன நடந்தது என்பதை நாம் நினைவு படுத்திக் கொள்ள முடியும், ஆனால் நேற்றைய தினத்தின் நிகழ்ச்சிகளை நாம் நினைவு படுத்திக் கொள்ளு

வதானது அவைகள் நடக்கக் காரணமாவதில்லை. ஒருவேளை, நம்முடைய நினைவுகள் காலத்தினூடே பின்னோக்கிச் செல்வது போல, தேவனுடைய முன்னறிவானது காலத்தினோடே முன்னோக்கிச் செல்வதாயிருக்கலாம். நாம் நமது கடந்த காலத்தில் நடந்தவைகளை நினைவு படுத்துவது போல தேவனுடைய முன்னறிவானது எதிர்காலத்தில் நடப்பவைகளை முன்னதாக அறியக் கூடும். எல்லாம் அறிந்த அவருடைய அறிவில் அவர் எதிர்காலத்தைக் காண்கின்றார்; ஆனால் அதைக் காண்பது என்பது எதிர்கால நிகழ்ச்சிகளை நடக்கச் செய்வதில்லை.

சுயாதீனமான ஒழுக்கத் தேர்வு மற்றும் முன் குறித்தல் ஆகிய இரு கருத்துக்களுமே புதிய ஏற்பாட்டில் அப். 2:23 என்ற ஒரு வசனத்தில் காணப்படுகின்றன. அவைகள் ஒரே வாக்கியத்தில் பயன்படுத்தப் படுகின்றன, மற்றும் அவைகள் ஒன்றையொன்று மறுத்து நிற்பதில்லை. பேதுரு, ‘‘தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவை யில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்’’ (அப். 2:23) என்று கூறினார். இயேசுவின் மரணத்தைத் தேவன் முன்னறிந்திருந்தார்; அவர் அதை முன் தீர்மானம் அல்லது முன் குறித்தல் கூடச் செய்திருந்தார், ஆனால் அதைச் செய்த அக்கிரமக்காரரையே அதற்குப் பொறுப்பாக்கினார். மனிதனுடைய சுயாதீனமான ஒழுக்கத் தேர்வும், தேவனுடைய முன்னறிவு மற்றும் அவரால் முன் குறிக்கப்படுதல் ஆகிய இவை யாவும் இந்த ஒரு வசனத்தில் காணப்படுகின்றன, இருப்பினும் ஒரு கருத்தானது மற்றதை நீக்கிப் போடுவதில்லை.

கிறிஸ்துவுக்குள் நம் இரட்சிப்பை தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே திட்டமிட்டார் அல்லது முன் குறித்தார், ஆனால் நாம் இரட்சிக்கப் படுவதற்கு இரட்சிப்பின் வட்டாரமான கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வருவதைத் தேர்ந்து கொள்ள வேண்டும். தேவனால் தேர்ந்து கொள்ளப் பட்டவர்களின் மத்தியில் இருப்பதை எவரொருவரும் தேர்ந்து கொள்ள முடியும். ‘‘யாரெல்லாம் விரும்புகின்றனரோ அவரெல்லாம் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களே, யாரெல்லாம் விரும்பவில்லையோ அவரெல்லாம் தேர்ந்து கொள்ளப்படாதவர்களே’’ என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

நீங்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளீர்களா? அவரால் நீங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் எவ்விதம் அறிய முடியும்? பவுலின் கூற்றுப்படி இதற்கு விடை எளிதாய் உள்ளது: நீங்கள் அவருக்குள் இருக்கின்றீர்களா? கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் தாங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களின் மத்தியில் இருக்கிறோம் என்று அகமகிழ முடியும். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கையில் காலமற்ற நித்திய கடந்த காலத்தில் தேவன் தேர்ந்தெடுத்த அல்லது முன் குறித்த இடத்தில் இருக்கின்றோம். இந்தப் பூமியில் நாம் இருக்கும் காலத்தில் கிறிஸ்துவுக்குள் நாம் உண்மையாய் வாழ்ந்தால், பரலோகமானது நமது நித்திய சுதந்தரமாக இருக்கும்.

## நித்தியத்திலிருந்து தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்

இரண்டாவது, தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களான சபையார் நித்தியத்திலிருந்தே தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தார்கள், உலகத் தோற்றத்திற்கு முன்னரே தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தார்கள் என்று பவுல் கூறினார். "... அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே" (எபே. 1:4) என்பது அவருடைய வார்த்தைகளாய் உள்ளன.

NASBயில் "foundation" (தமிழில் "தோற்றம்") என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளதற்கு மிகவும் அடிப்படையான ஒரு கிரேக்க வார்த்தையைப் பவுல் பயன்படுத்தினார். "துவக்கத்தின் துவக்கத்திற்கு முன்" என்பதே இதன் உண்மை அர்த்தமாகும். தேவன், தொடக்கமற்ற நித்திய கடந்த காலத்தில் நாம் பாவம் செய்வதற்கு முன்பே, நாம் படைக்கப்படுவதற்கு முன்பே, மற்றும் உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்பே நம்மைப் பற்றிச் சிந்தித்து, நம்மை அவருடைய தனிப்பட்ட மக்களாகத் தேர்ந்தெடுத்தார். பரிசுத்தமும் எல்லையற்றதுமான அவருடைய சிந்தையில் இயேசுவையும், அவரது சிலுவை மரணத்தையும் மற்றும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையையும் மையம் கொண்ட இரட்சிப்பின் திட்டமொன்றை வடிவமைத் ததினால் அவர் நம்மைத் தம்முடைய தேர்ந்தெடுத்த மக்களாயிருக்கும்படித் தெரிந்து கொண்டார். இந்தக் கருத்தில், இயேசு உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வெளி. 13:8; 1 பேது. 1:19, 20) என்று பேசப்பட முடியும்.

எரேமியாவிடத்தில் தேவன் "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்" (எரே. 1:5) என்று சொன்னார். தேவன் தன்னைத் தன் தாயின் வயிற்றிலிருந்ததுமுதல் பிரித்தெடுத்தார் என்று பவுல் சொன்னார் (கலா. 1:15). எரேமியாவின் அல்லது பவுலின் சுயாதீனமான ஒழுக்கத் தேர்வைத் தேவன் மீறி நடக்கவில்லை, ஆனால் அவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே அவர்களின் மீது அவர் தம்முடைய சிந்தையை வைத்திருந்தார். தேவன் தம்முடைய படைப்பின் சுயாதீனத் தேர்வில் இடையிடாமலே வடிவமைத்து, திட்டமிட்டு மற்றும் முன் குறிக்கக் கூட முடியும். நாம் அதைப் புரிந்துகொள்ள முடியாதிருக்கலாம், ஆனால் தேவனுடைய வசனத்தின் தெளிவான போதனையினால் நாம் அதன்மீது நிலைநிற்க முடியும்.

சபை என்பது தேவனுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நீங்கள் அறிய விரும்பினால், உலகத் தோற்றத்துக்கு முன்னரே அவர் சபையைத் தம்முடைய தேர்ந்தெடுத்த மக்களாயிருக்கும்படித் தெரிந்து கொண்டதைக் கருதிப் பாருங்கள். தேவன் ஏதொன்றையும் படைக்கு முன்பே இந்தத் தெரிந்து கொள்ளுதலை மேற்கொண்டார். கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலை பற்றிய நமது முன்னுரிமைகளை நாம் பெரும்பாலும், "அது நடந்த பொழுது, நான் ... பற்றி முதலில் சிந்தித்தேன்" என்று யாராவதொருவரிடம்

கூறுவதன் மூலம் அறியப் படுத்துகின்றோம். அந்தக் கணத்தில் நமக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதுவதை நாம் இவ்வழி முறையில் வெளிப் படுத்துகின்றோம். இதே வழிமுறையில்தான் தேவ வசனத்தின் ஊடுருவும் கருவியினால், தேவனுடைய சிந்தையில் முதலில் இருந்தது என்ன என்பதைக் காண்பதினால் தேவனுக்கு மிக முக்கியமானதாயிருப்பது என்ன என்பதை நாம் காண முடியும்: "உலகத் தோற்றத்துக்கு முன்பே அவர் நம்மைத் தெரிந்து கொண்டார்." அவரால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில், தெரிந்து கொள்ளப்பட்ட அவரது மக்கள் என்ற வகையில் சபையானது உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னதாகவே தேவனுடைய சிந்தையில் இருந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தேவனுக்கு எவ்வளவாய்ப் பிரியமுள்ள வர்களாய் இருக்கின்றனர்! காலத்தின் தொடக்க முதலே அவர்கள் தேவனு டைய சிந்தையில் இருந்துள்ளனர். இந்த சத்தியமானது நம்மைத் தெய்வீக ஊக்கமூட்டுதலுடன் உயிர்த்துடிப்பூட்டி பெலப்படுத்த வேண்டும்.

## பரிசுத்தத்திற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்

மூன்றாவது, நாம் பரிசுத்தத்திற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டதாகப் பவுல் கூறினார். அவர், "*தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ள வர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்ட படியே*" (எபே. 1:4) என்று எழுதினார். நாம் ஒரு நோக்கத்திற்காகத் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளோம்.

தேவன் சபையைத் தம்முடைய மக்களாயிருக்கும்படியும், தம்முடைய பண்பு அல்லது தம்மைப் போல அவர்கள் பிரதிபலிக்கும்படியும் தேர்ந்து கொண்டார். தம்முடைய சபையானது பரிசுத்தமாயிருக்கும்படி அவர் அதைப் பிரதிஷ்டை பண்ணினார். பேதுரு, "*உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றி லேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே*" (1 பேது. 1:15, 16) என்று கூறினார். பரிசுத்தம் என்றால் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டிருத்தல் மற்றும் தேவனுடைய பரிசுத்தப் பயன்பாட்டிற்காகப் பிரித்து வைக்கப் பட்டிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது.

தேவன் தம்முடைய மக்கள் குற்றமற்றவர்களாய் இருக்கும்படியாகவும் தேர்ந்து கொண்டுள்ளார். இந்த வார்த்தையானது "கறைகள் இல்லாத" அல்லது "குற்றம் இல்லாத" என்று அர்த்தப்படுகின்றது. இது தேவனுடைய மக்களின் இலக்கைச் சுட்டிக்காட்டுகின்றது. நாம் அவருக்கு முன்பாகக் குற்றமற்ற வாழ்வை வாழப் பிரயாசப்பட வேண்டும். இந்த வாழ்வில் நாம் இப்பேரவாவை முற்றிலுமாய் ஒருபோதும் அடையப் போவதில்லை என்றாலும், இது நமது இருதயங்களின் தொடர்ந்த எண்ணப்போக்காக உள்ளது. நித்தியத்தில் நாம் அவருடைய அரியணையின் முன் நிற்கும்

வரையிலும் பரிசுத்தம் மற்றும் குற்றமற்ற தன்மைக்கான நமது பிரயாசங்கள் உணரப்படாது. கிறிஸ்தவர்கள் தங்களுடைய கர்த்தரின் வளமான கட்டளைகளின் காரணமாக தங்களுக்கெதிராக சட்டப் பூர்வமான குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்படாதபடி தேவனுக்கு முன்பாக வாழ நாடுகின்றனர்.

---

*கிறிஸ்துவுக்குள் நம் இரட்சிப்பை, தேவன்,*
*உலகத் தோற்றத்திற்கு முன்பே திட்டமிட்டிருந்தார்*
*அல்லது முன்குறித்திருந்தார், ஆனால் இரட்சிப்பின்*
*செயல்களுக்குள்ளும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளும்*
*வருவதற்கும், இரட்சிக்கப்பட்டிருக்கவும்*
*நாம் தெரிவு செய்ய வேண்டும்.*

---

பவுல், ''நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்'' (எபே. 1:6) என்றும் கூறினார். தம்முடைய பிள்ளைகளாகும்படிக்கு நம்மை அவர் தேர்ந்தெடுத்துள்ளார். சுவிகாரம் என்பது இந்த சந்தர்ப்பப் பொருளில் "எல்லா உரிமைகளையும், சிலாக்கியங்களையும் மற்றும் மகனுக்குரிய பொறுப்புகளையும் பெற்றுக் கொள்ள" என்று அர்த்தப்படுகின்றது. சுவிகாரம் எடுக்கப்படும் தருணத்தில் தேவனுடைய குடும்பத்தில் மறைமுகமாய் உள்ள அந்த மகனுக்குரிய யாவையும் நாம் பெறுகின்றோம். தேவன், கிறிஸ்துவுக்குள் வந்த யாவரையும் தமது பிள்ளைகளாக்கி, அவர்களுக்கு எல்லா உரிமைகள், செல்வங்கள் மற்றும் தம்முடைய தெய்வீகக் குடும்பத்தின் பொறுப்புகள் ஆகியவற்றைத் தருவதென்று முன் குறித்து - முன்னதாகவே தீர்மானித்து, தொடக்கமற்ற நித்தியத்தின் கடந்த காலத்தில் முடிவு செய்து - வைத்தார்.

ஒருவேளை, நீங்கள் ஒரு வானொலி நிலையத்தாரால் அழைக்கப்பட்டு, ''நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள், நாங்கள் உங்களைத் தேர்ந் தெடுத்துள்ளோம்'' என்று உங்களுக்குக் கூறப்படுகிறதென்று வைத்துக் கொள்வோம். நீங்கள் உடனடியாக, ''எதற்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன்?'' என்று கேட்பீர்கள். ஒருவேளை, அழைத்தவர் ''நாங்கள் உங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம், ஆனால் எதற்காக என்பதை நாங்கள் அறியவில்லை. உங்களைத் தேர்ந்தெடுத்த பொழுது எங்கள் சிந்தையில் விசேஷமான எதுவும் நாங்கள் கொண்டிருந்ததில்லை. நீங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டவர்களாய் இருக்கின்றீர்கள் என்று மட்டுமே நாங்கள் உங்களுக்குக் கூற முடியும். கூடையில் ஆயிரக்கணக்கான பெயர்கள் இருந்தன, குலுக்கல் நடந்த பொழுது நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள், எனவே நாங்கள் உங்களைப் பாராட்டுவதற்காக அழைத்தோம்'' என்று கூறுகின்றார் என வைத்துக் கொள்வோம். ''நீங்கள் எதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள் என்பதை நாங்கள் அறியவில்லை'' என்று நீங்கள் கேட்ட உடனே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராய் இருப்பதினால் ஏற்பட்ட

உணர்வுக் கிளர்ச்சி மங்கி விடும். இனியும் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது தனிச் சிறந்தவர் என்று உணர மாட்டீர்கள். தேர்ந்தெடுக்கப் பட்டதன் சிலிர்ப்பானது அதன் அர்த்தத்தின் குழப்பத்தில் மறைந்து போய்விடும்.

தேவன் தமது தேர்ந்தெடுத்தலுக்குப் பின்னால் ஒரு நோக்கம் கொண்டுள்ளார். தேவன், கிறிஸ்துவுக்குள்ளான தமது இரட்சிப்பை நாம் பெறும்படிக்கும், அவரது பிள்ளைகளாக சுவிகரித்துக் கொள்ளும்படிக்கும், மற்றும் இவ்வுலகில் அவரது சொந்த மக்களாக பரிசுத்தமும் கறையற்றது மான வாழ்வை வாழ்வதற்கும் நம்மைத் தேர்ந்து கொண்டார். அவருடைய அழைக்கப்பட்ட மக்களாக ஒரு தெய்வீக ஊழியத்துடன் வாழ பிரித்தெடுத்து வைக்கும்படியாக நம்மை அவர் தேர்ந்தெடுத்தார்.

தேவனுடைய வசனத்திற்குச் சீரானதொரு ஒப்புக் கொடுத்தலினால் பரிசுத்தமும் குற்றமற்ற தன்மையும் பராமரிக்கப்படுகின்றன. தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் மூலமாக நாம் பிரித்து வைக்கப்பட்டுள்ளோம் அல்லது பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டுள்ளோம், மற்றும் அவரது சித்தத்தின்படியான நமது வாழ்வானது நம்மை அவருக்கு முன்பாகக் குற்றமற்றவர்களாக அல்லது கறையற்றவர்களாக ஆக்குகின்றது. நமது சகோதரரான பேதுரு கூறிய பின்வரும் வார்த்தைகளை நம் இருதயத்திற்கு எடுத்துச் செல்வோம்:

> *ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி, ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்திற்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் (2 பேது. 1:10, 11).*

## கிருபையினால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்

நான்காவது, நாம் கிருபையினால் தேர்ந்து கொள்ளப்படுகின்றோம். "பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே" *(எபே. 1:5, 6)* தேவன் நம்மைத் தெரிந்து கொண்டார் என்று பவுல் கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இந்தத் தேர்ந்து கொள்ளுதலானது தேவனுடைய நற்பண்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றினால் ஆரம்பிக்கப் பட்டு மற்றும் நிறைவு செய்யப்பட்டது.

"அவருடைய தயவுள்ள சித்தம்" என்ன? தேவனுடைய சித்தமானது கட்டளைகளையும், ஆணைகளையும் மற்றும் ஒழுக்க விதிகளையும் கொண்டுள்ளது. அவரது முழுமையான சித்தம் என்பது அதன் எல்லா நோக்கம் மற்றும் பாடக் கருத்துக்களில் ஒரு அடிப்படை நோக்கையும், ஒரு முழு நிறைவான தூண்டுதலையும் மற்றும் கிருபையுள்ள ஒரு வடிவமைப் பையும் கொண்டுள்ளது. இந்த அடிப்படை நோக்கம் என்பது என்ன? அது பாவத்திலிருந்து இரட்சிப்பு மற்றும் அவருடனான வாழ்வு என்பதாக

*இருப்பதில்லையா? வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் நமக்காக மிகச் சிறந்தவற்றை அவர் நாடுகின்றார். தேவன் செய்த எல்லாவற்றையும் நம் உண்மையான நல வாழ்விற்காகவே அவர் கொண்ட தயவுள்ள ஆர்வத்தி னாலேயே செய்தார். பேதுரு, "... கர்த்தர் ... ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந் திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேது. 3:9) என்று எழுதினார். பவுல், "நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ. 2:3, 4) என்று எழுதினார்.*

*தேவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக சபை நிலைத்திருத்தல் என்பது "பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக" (எபே. 1:5) இருப்பதற்கே ஆகும். தேவன் சபையைத் திட்டமிட்டார், சபையின் வருகையைத் தீர்க்க தரிசனமாய் உரைத்தார், சபையின் அஸ்திபாரத்தைப் போடுவதற்காக இயேசுவை அனுப்பினார், சபையைக் கிரயம் கொள்ள சிலுவையில் மரிக்கும்படியாக இயேசுவை அனுப்பினார், பெந்தெகொஸ்தே அன்று சபையை அற்புத விதமாகத் தொடங்கினார், மற்றும் சுவிசேஷத்தின் பிரசங்கித்தலை அருளிரக்கத்துடன் வழி நடத்தியிருக்கின்றார் - ஆனால் இவை யாவும் உலகத்தின் இரட்சிப்புக்கான அவருடைய பரிவிரக்கம் கொண்ட நோக்கத்தின் நிறைவேற்றமாகவே செய்யப்பட்டன. அவரது தெய்வீக செயல்பாட்டின் விளைவாக, சபை நிலைத்திருத்தல் என்பது அவரது கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவே ஆகும். சபையானது ஒன்றுமில்லாமையிலிருந்து தொடக்கம் பெற்றதென்றும் மற்றும் அது உலகப் பிரகாரமான ஒரு அமைப்பாகிக் கொண்டிருக்கிறது என்றும் தன்னை மேன்மை பாராட்டிக் கொள்ள முடியாது. அது தேவனுடைய கிருபையுள்ள நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றில் மட்டுமே மகிமை யடைய முடியும். அவரது கிருபையே நமது மகிமையாக உள்ளது.*

*உங்களது மிகச் சிறந்த ஆர்வத்தை நிலையாக நாடும் யாரைப் பற்றியாவது நீங்கள் எப்பொழுதாவது அறிந்திருக்கின்றீர்களா? "முதலில் நான்" என்பதற்குப் பதில், "முதலில் நீங்கள்" என்ற எண்ணப்போக்கை எப்பொழுதுமே கொண்டுள்ள ஒருவரை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? யாரேனும் ஒருவர் ஒவ்வொரு விஷயத்திலும் உங்களை முன்னுரிமைப் படுத்தியுள்ளாரா? நீங்கள் அறிந்துள்ளபடியான மிகவும் சுய நலமற்ற மற்றும் மிகவும் பெருந்தன்மையான ஒரு நபருடைய உருவ(க)த்தை நீங்கள் எடுத்து, அதைப் பத்து லட்சம் மடங்கு பெருக்க முடியுமென்றால், அது தேவனு டைய தன்மையின் தொடக்க நிலைச் சித்தரிப்பாக மட்டுமே இருக்கும். அவர் செய்கின்ற ஒவ்வொன்றும் அவரது அன்பான இரக்கத்துடனேயே செய்யப்படுகின்றது.*

*அவரது கிருபைக்கு நன்றியாக நாம் கிறிஸ்துவுக்குள் பெற்றுள்ள இரட்சிப்பினால், அவர் நமக்கு அளித்துள்ள ஊழியத்தினால், மற்றும் தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில் நாம்*

எதிர்காலத்தில் முடிவற்ற நித்தியத்தில் அவருடன் பெறப்போகும் மகிமையுள்ள எதிர்காலத்தினால் அகம் மகிழ வேண்டும். ஒவ்வொரு பரிசுத்தவானின் இருதயமும் தேவனுடைய ஒப்பற்ற கிருபையின் பாடக் கருத்துள்ள பாடலை நிலையாகப் பாட வேண்டும். தேவனுடைய மிக ஏராளமான கிருபையானது நமக்குள் நன்றியுணர்வையும், துதியையும், விசுவாசத்தையும் மற்றும் கீழ்ப்படிதலையும் உண்டாக்க வேண்டும்.

## முடிவுரை

உண்மையில், சபையானது தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட தென்று பவுலின் எழுதுகோல் மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் நமக்குப் போதித்துள்ளார். தேவன் தமக்குள் நம்மைத் தேர்ந்து கொண்டார், நித்தியத்திலிருந்து நம்மைத் தேர்ந்து கொண்டார், பரிசுத்தத்திற்கென்று நம்மைத் தேர்ந்து கொண்டார், மற்றும் அவரது கிருபையினாலே நம்மைத் தேர்ந்து கொண்டார் என்று அவர் நமக்குக் கூறியுள்ளார். நாம் அவரது கண்ணின் மணியாய் இருக்கின்றோம். அவர் உலகத்தைப் படைக்கத் திட்டமிட்ட பொழுது நாமே அவரது சிந்தையில் முதற் பொருளாய் இருந்தோம், மற்றும் இப்பொழுது நாம் அவரது பிரதான சிந்தனையாய் இருக்கின்றோம்.

கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்ற, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வட்டத்திற்குப் புறம்பே இருக்கின்ற எவரொருவரும் தாமதம் எதுவுமின்றி அவருடைய சரீரத்திற்குள் பிரவேசிப்பதைத் தேர்ந்து கொள்ள வேண்டும். நான் உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, மிகச் சிறப்பான மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியின் "யார் யார்" என்ற ஆண்டுப் புத்தகத்தில் இடம் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒரு சிலரே தேர்ந்தெடுக்கப்பட்டனர், மற்றும் தேர்ந்தெடுத்தல்களானது மாணவரின் நற்பெயர், மேன்மையான திறமைகள் மற்றும் உயர்வான பதிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தன. தேவனுடைய "யார் யார்" புத்தகம் சபை ஆகும். அவருடைய "யார் யார்" மத்தியில் இருப்பது என்பது தேவன் ஏற்படுத்தும் தெரிவு அல்ல, அது நாமே ஏற்படுத்திக் கொள்ளும் தெரிவு ஆகும். நமது நற்பெயர்/புகழ்ச்சி, திறமைகள் அல்லது பதிவுகள் ஆகியவற்றினால் அல்ல, மாறாக, நமது விசுவாசம் மற்றும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றினாலேயே அவர் நம்மை தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் குழுவினுள் வைக்கின்றார். அவருக்குப் பிரியமானவரான இயேசு கிறிஸ்துவிற்குள் நம் மீது பொழியப் பட்ட அவருடைய அன்பின் கிருபையின் மூலம் தேவன், தேர்ந்து கொள்ளப்படாது உள்ள யாவரையும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் பிரவேசித்து, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆகும்படிக்கும், இரட்சிப்பு, நிறைவான வாழ்வு மற்றும் பரலோகத்தில் நித்திய ஜீவன் ஆகியவற்றிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகும்படிக்கும் அழைக்கின்றார்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மத்தியில் இருப்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவராய்

இருப்பதைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். தேவனால் முன் குறிக்கப்பட்ட பிள்ளைகளில் ஒருவராய் இருக்கத் தீர்மானம் செய்யுங்கள்.

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய உறுப்பினர்கள் யாவரும் தேவனால் தரிவு செய்யப்பட்டவர்கள் என்று நீங்கள் கூறுவீர்களா?
2. எபே. 1:4-6ல் பவுலின் கூற்றுப்படியாக கிறிஸ்துவுக்குள் காணப்படும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் யாவை?
3. ஒரு குழுவின் முன் குறித்தலுக்கும் ஒரு நபரின் முன் குறித்தலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?
4. ''முன் குறித்தல்'' என்ற வார்த்தை எதனை அர்த்தப்படுத்துகின்றது?
5. ''முன்னறிவு'' மற்றும் ''முன் குறித்தல்'' என்பவற்றின் அர்த்தத்தில் உள்ள வேறுபாடு என்ன?
6. நாம் தேவனால் தெரிவு செய்யப்பட்டுள்ளோம் என்பதை நாம் எவ்விதம் அறிய முடியும்?
7. தேவன் எப்பொழுது நம்மை அவருக்குள் தெரிவு செய்தார்?
8. நாம் என்ன செய்ய வேண்டும் அல்லது எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் தெரிவு செய்துள்ளார்?
9. "பரிசுத்தம்" என்ற வார்த்தையை விவரிக்கவும்.
10. ''கிருபையினால் தெரிந்து கொள்ளப்படுதல்'' என்ற சொற்றொடர் அர்த்தப்படுத்துவது என்ன?
11. "தேவனால் தெரிந்து கொள்ளப்படுதல்" என்ற சொற்றொடர் உங்களை எவ்விதத்தில் ஊக்குவிக்கின்றது?
12. நாம் எவ்விதத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களாகின்றோம்?